# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC.05/2025 | Date: 18.07.2025 |
| Deposition of Witness for | : **பு.சா.1** | |
| Name | : **யோகநாதன்** | |

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை** :-

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நான் தற்போது ஓலப்பாளையத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன், முன்னதாக சங்ககிரி வட்டம், கிடையூரில் மேக்னம் ஸ்பின்னிங் மில்லில் எலக்ட்ரிகல் மேற்பார்வையாளராக வேலை செய்து வந்தேன். எனது சொந்த ஊர் தேவூர். எனது மாத வருமானம் ரூ.25,000/-ம் ஆகும். எனக்கு இது தவிர வேறு வருமானம் உள்ளதாள ன்றால் ஓய்வு நேரங்களில் கான்ட்ராக்டர் எடுத்து எலட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன்.

2) கான்ட்ராக்டர் எடுத்து எலட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன்என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் கடந்த 07 வருடங்களாக எனக்கு தெரியும். மேக்னம் ஸ்பின்னிங் மில்லில் எலக்ட்ரிகல் மேற்பார்வையாளராக வேலை செய்தபோது அவர் எனது பிரிவில் எனக்கு கீழ் பணிபுரிந்து வந்தார். எதிரி குடியிருக்கும் வீடு, வசதி, வருமானம் ஆகியவற்றை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, வீடு இருப்பதாக கூறியுள்ளார், வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியாது.

3) எதிரி அவரது தந்தையுடன் கூட்டு குடும்பமாக வசித்து வருவது தெரியுமா என்றால் தெரியும். எனக்கு எந்தெந்த வங்கிகளில் வங்கி கணக்குகள் உள்ளது என்றால் TMB bank, Thevoor branch and State bank of india, sankari branch உள்ளது. இந்த வழக்கு பணபரிவர்த்தனைக்கு முனபு எனக்கும், எதிரிக்கு பணபரிவர்த்தனை இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி, பரிவர்த்தனை வங்கியின் மூலமாக நடந்ததா என்றால் பெரும்பாலான சமயத்தில் வங்கியின் மூலமாக நடந்தது, சில சமயம் கையில் ரொக்கமாகவும் கொடுத்துள்ளேன். கையில் ரொக்கமாக இருந்தால் கையில் கொடுத்துவிடுவேன், வங்கியில் இருந்தால் வங்கியின் மூலமாக அனுப்பிவிடுவேன்.

4) இந்த வழக்கிற்கு முந்தைய எதிரியுடனான பணபரிவர்த்தனைகளை நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதால் நான் குறிப்பிடவில்லை. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் என்ன குறிப்பிட்டுள்ளார் என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, சாட்சி தற்போது பதில் அறிவிப்பில் உள்ள விவரம் தெரியும் என சாட்சயிம் அளித்தார். முன்பு வாங்கிய பணத்திற்க்காக கொடுக்கப்பட்ட காசோலை தான் இந்த வழக்கு காசோலை என்றாலும், வழக்கில் குறிப்பிட்டுள்ள தேதியில் எதிரி கடன் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

5) மேக்னம் ஸ்பின்னிங் மில்லில் பணிபுரிந்த சமயத்தில் எனக்கும், எதிரிக்கும் இடையே பணபரிவர்த்தனை சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டபோது நான் எதிரியின் இருசக்கர வாகனம் மற்றும் அவரது மோதிரத்தை வாங்கி வைத்துகொண்டேன் என்றாலும், அது சம்பந்தமாக மேக்னம் ஸ்பின்னிங் மில்லின் உரிமையாளர் எங்களுக்குள் சமாதானம் பேசினார் என்றாலும் சரியல்ல. சமாதானம் பேசியபோது மேக்னம் ஸ்பின்னிங் மில்லின் உரிமையாளர் இனிமேல் எதிரிக்கு பணம் கொடுக்கும் சமயத்தில் அவரது வீட்டில் உள்ளவர்களை ஆலோசிக்காமல் எதிரிக்கு பணம் கொடுக்க கூடாது என பேசினார்கள் என்றால் சரியல்ல.

6) கடந்த 09-07-2024ம் தேதி எதிரி உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் தற்கொலை முயற்சி செய்திருந்ததால் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சைக்காக சங்ககிரி அரசு மருத்துவமனையில் இருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டார். அதன்பிறகு, எதிரி மேக்னம் ஸ்பின்னிங் மில்லிற்கு வேலைக்கு வரவில்லை என்றால் சரிதான்.

7) எதிரியின் தற்கொலை முயற்சிக்கு நான் தான் காரணம் என்று எதிரியின் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்பந்தமாக சங்ககிரி போலிசார் என்னை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. இந்த பிரச்சனைக்கு பிறகு தான் மேக்னம் ஸ்பின்னிங் மில்லில் இருந்து என்னையும் பணிக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் என்னிடம் ரூ.9,00,000/-ம் பணம் ரொக்கமாக இருந்தது என்பதை காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை.

8) எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் எனது வங்கி கணக்கில் தொகை இருந்தது என்பதை காண்பிப்பதற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு கடன் ் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எனக்கு ரூ.9,00,000/-ம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்ன தேவைக்காக என்னிடம் கடன் கேட்டார் என்றால் வெளிநபர்களிடம் நிறைய கடன் பெற்றிருந்ததால் அதனை அடைப்பதற்காக என்னிடம் கடன் கேட்டார். எதிரி

என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லும் தேதியில் அவரிடம் வருமானம் எதுவும் இல்லை என்றால் சரிதான், சீட்டு போட்டு கொண்டிருப்பதாக கூறினார், அதனை எடுத்து தருவதாக கூறினார்.

9) நான் சொல்வது தவறு என்றும், எதிரி கடனாளியாக இருக்கும் சமயத்தில் எதிரிக்கு நான் ரூ.9,00,000/-ம் தொகை ரொக்கமாக கடனாக கொடுப்பதாக நான் சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் இடையே இருந்த முந்தைய பரிவர்த்தனையின்போது கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கில் கூறியுள்ள தேதியில் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலையின் எண்.0192032 என்ற காசோலை எண்ணிற்கு பிந்தைய காசோலை எண்களான 0192033, 0192034, 0192035 ஆகிய காசோலைகளும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல.

10) மேற்படி காசோலைகளும் என்னிடம் தான் உள்ளது என்றும், அது மட்டுமல்லாமல் வெற்று புரோநோட், வெற்று முத்திரைத்தாள் ஆகியவைகளும் என்னிடம் தான் உள்ளது என்றும், அதனை திருப்பி கொடுக்குமாறும் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதனை மறுத்து நான் மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Yoganathan

Judicial Magistrate No.1,

Sankari.